2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்காலத்து மன்னர்கள் எப்படி திருக்கோயில்களில் கவனம் செலுத்தி எழுப்பினார்களோ, அதற்கிணையான கவனத்தையும் அக்கறையையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்துறைக்குச் செலுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, 13-வது நிதிக் குழுவிலேகூட முதல்முறையாக 100 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற திருக்கோயில் குறித்து நான் ஏற்கெனவே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். எட்டாண்டுகள் கடந்திருக்கிற நிலையில், இன்னும் ஓரிரு ஆண்டுகளில் அந்தப் பணியைத் துவங்கினால்தான் குடமுழுக்கு நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். குறிப்பிட்ட காலத்தில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

67—

தரம் உயர்த்துதல்

***116998—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை, மணல்மேடு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை, மணல்மேடு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அருகிலேயே 8 கிலோ மீட்டர் தூரத்தில், திருமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியும், 1/2 கிலோ மீட்டர் தூரத்தில் மணல்மேடு அரசு மேல்நிலைப் பள்ளியும் உள்ளன.

[2010 ஏப்ரல் 20

மேலும் இப்பள்ளிக்குப் போதிய இடவசதி இல்லாததோடு பொதுமக்கள் பங்குத் தொகை செலுத்தப்படாத நிலையில் இக்கோரிக்கையை அரசு பரசீலிக்க இயலாத நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், அவையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை தாலுகாவிலே இருக்கிற மணல்மேடு அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி குறித்து இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற தகவல் அனைத்தும் உண்மை. ஆனால், இரண்டு பள்ளிகளும் அருகிலேயே இருக்கின்றன. ஆனால், பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இடமில்லை என்று சொன்னபோது, பேரவையின் மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் ஆய்வு செய்து, ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே இருக்கக்கூடிய இடத்தையும் சிறிது தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்தப் பள்ளி நிருவாகமும் மாவட்டக் கல்வி நிருவாகமும், ஒப்புதல் அளித்திருக்கின்றன. குறிப்பாக, இந்த அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவச் செல்வங்கள் அதிகமாகப் படிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனைச் சிறப்பினமாகக் கருதி, விதித் தளர்வு செய்து அங்கிருக்கக்கூடிய நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய வகையில் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகில் இருக்கக்கூடியதாக இருந்தாலும்கூட, இந்த அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் அன்பழகன் அவர்கள் தெரிவித்திருக்கிறவாறு, பக்கத்திலே இருக்கக்கூடிய ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலிருந்து போதிய இடவசதி இந்தப் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கு அளிக்கக்கூடியபட்சத்தில், அங்கே அதிகமாக தாழ்த்தப்பட்ட

2010 ஏப்ரல் 20]

சமுதாயத்தைச் சார்ந்த மாணவப் பெருமக்கள் பயிலக்கூடிய காரணத்தால், அரசு நிச்சயமாக உரிய விதித் தளர்வு செய்யும். காரணம் என்னவென்று சொன்னால், இத்தகைய சூழல்களில் அதிகமாக ஆதி திராவிட மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளி, அதைப்போல மலைப்பாங்கான பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதேபோல, மகளிருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்கின்ற அடிப்படையில் அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த மணல்மேடு அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியையும் உரிய வகையில் விதித் தளர்வு செய்து இந்த ஆண்டு அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு உத்தரவாதம் தந்திருப்பதற்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியை அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. மலரவன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

68—

உயிரியல் பூங்கா

***62332—திரு. தா. மலரவன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் உயிரியல் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS